"போக்குவரத்துத் துறை பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.348,79,48,000/-, மூலதனக் கணக்கில் ரூ.125,32,52,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.125,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30-4-2010) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

98. மானியக் கோரிக்கை எண் 25-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

99. மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2010-2011. (தமிழ், ஆங்கிலம்)

100. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் நான்கு ஆண்டு சாதனைகள் குறித்த சிறு நூல். (தமிழ்)

101. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எண்பத்தைந்தாவது அறிக்கை. (2009-2010)

TRUTH ALONE TRIUMPHS